# முதல் திருப்புதல் தேர்வு ஜனவரி 2022
# மாதிரி வினாத்தாள் - 2
# பத்தாம் வகுப்பு

## சமூக அறிவியல்

### பகுதி 1

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்** 14X1=14

1. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் "உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
   அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்

2. பின்லாந்தைத் தாக்கியதற்காக சர்வதேச சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

3. கூற்று: தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்திய பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது
   காரணம் : அமெரிக்கா கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டாகிறது.
   அ) கூற்று, காரணம் இரண்டும் சரி.
   ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.
   இ) கூற்று காரணம் ஆகிய இரண்டுமெ தவறு.
   ஈ) கூற்று தவறு, காரணம் கூற்றுக்குப் பொருத்தமாக இல்லை.

4. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா ________ ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது
   அ) கோவா ஆ) மேற்கு வங்காளம் இ) இலங்கை ஈ) மாலத்தீவு

5. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ________
   அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

6. உலகின் மிக அதிக அளவு மழை பெறும் பகுதி________
   அ) சென்னைஆ) மௌசின்ராம் இ) கோவா ஈ) கொச்சின்

7. கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிககளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு ___________ காற்றுகள் உதவுகின்றன.
   அ) லூ ஆ) நார்வெஸ்டர் இ) மாஞ்சாரல் ஈ) ஜெட் காற்றேட்டம்

8. கூற்று: இமயமலை ஒரு காலநிலை அரணாக செயல்படுகிறது.
   காரணம்: இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்காற்றை தடுத்து இந்திய துணைக்கண்டத்தை மிதவெப்பமாக வைத்திருக்கிறது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. கூற்றுக்கான காரணமும் சரி
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. கூற்றுக்கான காரணம் தவறு
   இ) கூற்று சரி காரணம் தவறு
   ஈ) கூற்று தவறு காரணம் சரி

9. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டுள்ளது

அ) 1முறை ஆ) 2 முறை இ) 3முறை ஈ) எப்போதும் இல்லை

10. நமது அடிப்படை கடமைகளை __________ இடமிருந்து பெற்றோம்.

அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு

இ) ரஷ்யா அரசியலமைப்பு ஈ) இங்கிலாந்து அரசியலமைப்பு

11. லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது.

அ) 18 ஆ) 21 இ) 25 ஈ) 30

12. புதுடெல்லியில் அமைந்துள்ள இந்திய உச்சநீதிமன்றம் ________ நாள் துவங்கப்பட்டது.

அ) 1950 ஜனவரி 28 ஆ) 1948 ஜனவரி 28

இ) 1950 ஆகஸ்ட் 15 ஈ) 1956 ஜனவரி 28

13. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது.

அ) வேளாண்மை ஆ) தானியங்கள் இ) வர்த்தகம் ஈ) வங்கி

14. _______ முறையில் ஒவ்வொரு இடைநிலைப் பண்டத்தின் மதிப்பை கூட்டும் போது இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.

அ) செலவு முறை ஆ) மதிப்பு கூட்டு முறை இ) வருமான முறை ஈ) நாட்டு வருமானம்

## பகுதி II

1. **எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி**
2. **28வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **10X2=20**

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

16. பன்னாட்டு சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் 2 காரணங்களை பட்டியலிடுக.

17. ஒட்டாவா பொருளாதார உச்சிமாநாட்டின் முக்கியத்துவம் யாது?

18. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?

19. இந்திய அண்டை நாடுகளின் பெயர்களை கூறு.

20. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.

21. வெப்ப குறைவு விகிதம் என்றால் என்ன?

22. ஜெட் காற்றோட்டங்கள் என்றால் என்ன?

23. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?

24. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட செம்மொழிகள் யாவை?

25. இந்தியக் குடியரசு தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

26. உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?

27. நாட்டு வருமானம் - வரையறு.

**28.** காலநிலையை பாதிக்கும் காரணிகள் யாவை?

www.Padasalai.Net www.Padasalai.Org

## பகுதி III

1) **எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி.**
2) **42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 10X5=50

29. **கோடிட்ட இடங்களை நிரப்புக**

a) ஒட்டாவா பொருளாதார உச்சிமாநாடு _________ ம் ஆண்டு நடைபெற்றது.

b) வியட்நாம் தேசியவாதிகள் கட்சி _________ல் நிறுவப்பட்டது.

c) ஒரே அளவு மழை பெறும் இடங்களை இணைக்கும் கோடு _______ ஆகும்.

d) .முதன்முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை ______ நாடுகளில் தோன்றியது.

e) _________ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவி.

30. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. கண்ணாடி மாளிகை | - | மாநில நெருக்கடி நிலை |
| 2. சட்டப்பிரிவு 356 | - | தமிழ் |
| 3. சட்டப்பிரிவு 14-18 வரை | - | வெர்செய்ல்ஸ் |
| 4. செம்மொழி | - | வேளாண்மை |
| 5. விலைக்கொள்கை | - | சமத்துவ உரிமை |

31. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவரி.

32. வேறுபடுத்துக

a) மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்

b) வானிலை மற்றும் காலநிலை

காரணம் கூறுக

மேற்கு கடற்கரைச் சமவெளி குறுகலானது ஏன்?.

33. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.

34. உலகப் போர்களுக்கிடையில் (1919-1939) இந்தியாவில் காலனிய நீக்கம் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனை குறித்து வரிசையாக விவரி.

35. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.

36. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.

37. இந்திய அரசியலமைப்பின் சிறப்பு கூறுகளை விளக்குக.

38. அடிப்படை உரிமைகளை குறிப்பிடுக.

39. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை திறனாய்வு செய்க.

40. இந்தியாவில் GDP-யில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Padasalai.Org

**41. பின்வருவனவற்றிக்கு காலக்கோடு வரைக**

1900 முதல் 1920 வரையிலான ஆண்டுக்கு உட்பட்ட உலக வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிப்பிடுக

42. உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்

1. இத்தாலி 2. இங்கிலாந்து 3. துருக்கி 4. பிரான்ஸ் 5. ஜெர்மனி

**பகுதி IV**

**இரண்டு வினாக்களுக்கு விடையளி** **2X8=16**

**43.** அ) அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகள் மற்றும் அரசியலமைப்பு உட்பட்டு தீர்வு காணும் உரிமை - விளக்குக

**(அல்லது)**

ஆ) இந்திய உச்சநீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்.

அ) 1. காரகோரம் 2. மேற்கு தொடர்ச்சி மலை 3. லட்சத்தீவுகள் 4. பாமீர் முடிச்சு

5. K2 சிகரம் 6. கங்கை சமவெளி 7. தக்காண பீடபூமி

8. வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை

**(அல்லது)**

ஆ) 1. கன்னியாகுமரி 2. நீலகிரி மலை 3. சென்னை

4. மன்னார் வளைகுடா 5. ராமேஸ்வரம் 6. காவிரி

7. சோழமண்டல கடற்கரை 8. வங்காள விரிகுடா

****************

Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com